

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று உடல்நிலை காரணமாக வீட்டில் ஓய்வில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

கழக மகளிர் அணியினர் ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டு பெண்கள் எச்சரிக்கை மணி அடித்து விட்டனர்!

த.வெ.க. அரசுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, நவ. 1-

கழக மகளிர் அணியின் ஆர்ப்பாட்டம் குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் "தமிழ்நாட்டு பெண்கள் எச்சரிக்கை மணி அடித்து விட்டனர்" என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளதில பதிவிட்டிருப்பதாவது:-

தமிழ்நாடெங்கும் நேற்று @DMK Womens Wing நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில், கட்சி சார்பற்ற மகளிரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

தங்கள் வீடுகளின் EB Billஐயும் மளிகை Billஐயும் பார்த்து, இந்த ஆட்சி மீது பெண்கள் பெரும் கோபத்தில் இருக்கின்றனர். விலைவாசி ஏற்றத்தால் ஏழை மக்கள் விக்



கித்து நிற்கிறார்கள்.

Show காட்டுவதில் தான் முதல்வருக்குக் கவனம்!

போதாக் குறைக்கு, பெண்களுக்கு எதிரான குற்றங்களும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. தங்கள் வீட்டுப் பிள்ளைகளை வீட்டுக்கு வெளியே விளையாட விடவே அச்சப்படும் அளவுக்குச் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போயுள்ளதையும் அவர்கள் செய்திகளில் தினம்தினம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

விமர்சனம் செய்வோரை வேட்டையாடுவதிலும், இடைத்தேர்தல் நடக்கவுள்ள தொகுதிகளில் Show காட்டுவதிலும் முதலமைச்சருக்கு இருக்கும் கவனம் ஆட்சி நிர்வாகத்திலும் இருக்க வேண்டும் என்பதற்கான எச்சரிக்கை மணியைத் தமிழ்நாட்டுப் பெண்கள் அடித்துவிட்டனர்.

அவர்களின் #WakeUpCallக்குச் செவி சாய்ப்பது அரசின் கடமை!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில், த.வெ.க. ஆட்சியில் நிலவிவரும் சட்டம், ஒழுங்குச் சீர்கேடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கடுமையான விலைவாசி உயர்வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பாண்டிச்சேரி மாநில தி.மு.க. மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த் கண்டன உரை நிகழ்த்தினார். உடன் மேயர் நிர்மலா வேல்மாறன், பார்வதி சீனுவாசன், விஜயலட்சுமி ரமேஷ், ஜெயராணிரவி, பாரதிராமஜெயம், அன்பரசி ராஜசேகர், ராணி சண்முகம், மாவட்ட அமைப்பாளர்கள் கற்பகம் சரவணன், மாலினி வினோத், உ.நித்யா, இராணி வெங்கடேசன் உட்பட பலர் உள்ளனர்.

அரசு பணிகளுக்கு கமிஷன் கேட்பதாக

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் மீது ஒப்பந்ததாரர்கள் புகார்!

சிவகங்கை நவ.1-

சிவகங்கை த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் அரசின் பணிகளை வேலை பார்க்க ஒப்பந்த தாரர்களி டம் 20சதம் கமிசன் கேட்பதாக புகார் கூறப்பட்டது. சிவகங்கை சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக த.வெ.க.வைச் சேர்ந்த குழந்தை ராணி நாச்சியார் உள்ளார். இவர் அரசு பணிகளுக்கான டெண்டர் விடப்படுவதில் ஒப்பந்ததாரர்களிடம் 20% கமிஷன் கேட்பதாக புகார் கூறப்பட்டது.

இது குறித்து சிவகங்கை ஒன்றிய அலுவலக ஆணையரிடம் ஒப்பந்த காரர்கள் நேரில் புகார் மனுவினை கொடுத்தார்கள். சிவகங்கை பகுதியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒன்றிய ஆணையரிடம் சிவகங்கை சட்டமன்ற தொகுதி த.வெ.க. உறுப்பினர் அரசு திட்ட பணிகளை டெண்டர் எடுக்க 20% கமிஷன் கேட்பதாக புகார் மனுவினை கொடுத்தார்கள். அவ்வாறு கமிசன் தரவில்லை என்றால் த.வெ.க. கட்சிகாரர்களுக்கு வேலை தரப்படும் என்று ஒப்பந்ததாரர்களிடம் கூறி யுள்ளார்.

முதல்வர் விஜய் ஆன்லைன் முறையில் டெண்டர் விடப்படும். இதில் தவறு ஏற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறி வித்துள்ளார். ஆன்லைன் முறையில் இந்த ஒப்பந்தங்கள் பெறப்பட வேண்டும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். ஆனால் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் தான் கூறும் நபர்களுக்கு மட்டும் தான் வேலையை தர வேண்டும். அதில் ஒப்பந்ததாரர்கள் 20 சதம் கமிஷன் தர வேண்டும் என்று கேட்டு நிர்பந்தம் செய்து வருகிறார்.

இதைக் கண்டித்தும் சரியான முறையில் பாரபட்ச மின்றி டெண்டர் வாயிலாக தகுதி உள்ள ஒப்பந்த காரர்களுக்கு பணிகள் வழங்கப்பட வேண்டும் என்று 20க்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒன்றிய அதிகாரி யிடம் புகார் மனு கொடுத்துள்ளார்கள் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூபாய் 11 கோடியில் பல்வேறு பணி களுக்கான திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் விடப்படுவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஒப்பந்த தாரர்கள் பகிரங்கமாக சட்டமன்ற உறுப்பினர் மீது கமிசன் புகார் கூறியது பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழா!

திருவுருவச்சிலைக்கு மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார்!

தென்காசி .நவ.1-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் திருமகனார் அவர் களின் 119 பிறந்தநாள் மற்றும் 64 வது குருபூஜையை முன்னிட்டு பசும் பொன் தேவர்திருமகனார் அவர் களின் புகழை போற்றும் விதமாக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் தென்காசி தொகுதிக் குட்பட்ட ஆலங்குளம் ஊராட்சி ஒன்றி யம் ஊத்து மலையில் அமைந்துள்ள தேவர் திருமகனாரின் திருவுருவ சிலைக்கும், தென்காசி ஒன்றியம் சுந் தரபாண்டியபுரத்தில் அமைந்துள்ள தேவர் திருமகனாரின் திருவுருவச் சிலைக்கும், தென்காசி நகரம் கீழப்பு லியூரில் அமைந்துள்ள தேவர் திரும கனாரின் திருவுருவசிலைக்கும், தென் காசி நகரம் மலையான் தெருவில் அமைந்துள்ள தேவர் திருமகனாரின் திருவுருவச் சிலைக்கும், தென்காசி ஒன்றியம் வேதம் புதூரில் அமைந் துள்ள தேவர் திருமகனார் திருவுருவச் சிலைக்கும், குத்துக்கல்வலசையில் அலங்கரிக்கப்பட்ட தேவர் திருமகனார் அவர்களின் திருவுருவப்படத்திற்கும் மாலை அணிவித்தும் மலர் தூவியும் புகழ் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், தென்காசி கிழக்கு ஒன்றியச் செயலா ளர் அழகு சுந்தரம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார், குற்றாலம் அறங்காவலர் குழு உறுப் பினர் சுந்தர்ராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்த், மாவட்ட இளை ஞரணி துணை அமைப்பாளர் கிழப் புலியூர் தங்கபாண்டியன், சுந்தர பாண்டியபுரம் பேரூர் செயலாளர் பண்டாரம், மாரிமுத்து பாண்டியன், கிழக்கலங்கல் ஊராட்சி மன்ற தலை வர் வி.எஸ்.சந்திரசேகரன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பா ளர் முத்தரசு, ஊத்துமலை தங்கம், தாய்குலம் சரவணன் உள்பட கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

'டம்மி' முதல்வர் விஜய் ஆட்சியில்

சிறைத்துறை சீரழிந்துவிட்டது!

முன்னாள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ. 1-

விராலிமலை தி.மு.க. வில் இருந்த ஒற்றர்கள் வெளியேறிவிட்டதால், இனி நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று முன்னாள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.



புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

விராலிமலை தொகுதியில் தி.மு.க.வில் இருந்த ஒற்றர்களை வைத்துதான் சி.விஜயபாஸ்கர் வெற்றி பெற்றார். தி.மு.க.வுக்குள் இருந்து கொண்டு உள்ளடி வேலை பார்த்து வந்த அந்த ஒற்றர்கள் தற்போது த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இதனால், இனி விராலிமலை தொகுதியில் தி.மு.க.தான் வெற்றி பெறும்.

அனைத்துத் துறைகளி லும் தமிழக அரசு தோல்வி கண்டுவிட்டது. இதனால் மக்கள் அதிருப்தியில் உள்ளனர். இதை மடைமாற்றம் செய்வதற்காக, தி.மு.க.வினர் மீது பல்வேறு பொய்யான குற்றச்சாட்டு களை த.வெ.க. வினர் சுமத்தி வருகின்றனர். அவற்றையெல்லாம் நீதிமன்றங்கள் மூலம் தகர்த்து எறிவோம். தி.மு.க. ஆட்சியில் சிறப்பாக செயல்பட்டு வந்த சிறைத்துறை, தற்போது சீரழிந்துவிட்டது. இது ஒன்றே 5 மாத த.வெ.க. ஆட்சிக்கு சாட்சி. இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை மூலக்கடையில் நடைபெற்ற, பெரம்பூர் தெற்குப் பகுதி 44 ஆவது வட்டக் கழகச் செயலாளர்,சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் ஆ.இராசலட்சுமி இணையரின் மகள் ஆ.தமிழ்பொன்னி கு.விக்னேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ், தொழிலாளர் அணித் துணைச்செயலாளர் பிடிசி.வெ.பாலு, திருவொற்றியூர் மேற்குப் பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன்,மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க துணைத் தலைவர் ஆர்.கந்தன், இணைச் செயலாளர் எம்.சுந்தரமூர்த்தி, எஸ்.பிரதாப்குமார், ஆர்.அய்யப்பன், பாரதி, டி.இஸ்ரேல், ஆர்.ஆல்வின் ராஜா, கே.பி.பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இராணிப்பேட்டை முத்துக்கடையில் மாவட்ட தி.மு.க. செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில மகளிரணி பிரச்சார குழு செயலாளர் குடியாத்தம் திருமதி.அமுலுவிஜயன்.மாவட்ட மகளிர்அணி அமைப்பாளர் மு. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பவானி வடிவேலு, ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி, துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் அணியினர் அனைவரும் கலந்து கொண்டனர்.